


**20. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் நிதி உதவி திட்டத்தின் கீழ், 23 ஆவது தவணை தொகையை, பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று விடுவிக்கிறார்.

2. உணவகங்களில், சுகாதாரமான முறையில் உணவு பொருட்கள் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. அருண்ராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

3. தமிழக மின்துறையில் புதிதாக 15 ஆயிரம் பணியிடங்கள் உருவாக்கப்படும் என அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

4. திமுக கூட்டணியிலிருந்து விலகுவதாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அறிவித்துள்ளது.

5. இந்தியாவிற்கு எதிரான 3-வது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர் - வேளாண் நிதி

பிரதமர் திரு.நரேந்திரமோடி, மேற்குவங்க மாநிலம் தாரகேஸ்வரில், பிரதமரின் வேளாண் நிதி உதவி திட்டத்தின் கீழ், 23 ஆவது தவணை தொகையை, இன்று விடுவிக்கிறார்.

நாடுமுழுவதும் 9 கோடியே 44 லட்சம் வ்விவசாயிகளின் வங்கி கணக்கில், 18 ஆயிரத்து 880 கோடி ரூபாய் நிதி, இத்திட்டத்தின் கீழ் வரவு வைக்கப்படும்.

முன்னதாக ஒடிசா மாநிலத்தில் 47 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளையும் பிரதமர் இன்று தொடங்கிவைக்கிறார்.

************

யோகா

பிரதமர் திரு.நரேந்திரமோடி 12ஆவது சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளை கொல்கத்தாவில் நாளை தொடங்கிவைக்கிறார்.

வரலாற்று சிறப்பு மிக்க ரெட்ரோட் பகுதியில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய பிரதேச மாநிலம் சாதர் மைதானத்தில் நடைபெறும் யோகா நிகழ்ச்சிகளை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாளை தொடங்கிவைக்கிறார்.

நாட்டின் 100 நகரங்களில் யோகா தின சிறப்பு நிகழ்வுகளுக்கு மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள நிலையில் அமெரிக்கா, துபாய் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன.

"ஆரோக்கியமான முதுமைக்கு யோகா" என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் தினசரி வாழ்வில் யோகாவை வலியுறுத்தும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

************

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவின் 68ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி, முதலமைச்சர் திரு.விஜய் உள்ளிட்டோர் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் வெளியிட்ட செய்தியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்களுக்கான நலன்களை பேணுவதில் உறுதி பூண்டுள்ளதுடன் நாட்டின்

வளர்ச்சிக்கான அவரது அர்ப்பணிப்பு மிக்க பயணம் அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.

************

பிரதமர் – 12 ஆண்டு

பிரதமர் திரு. நரேந்திரமோடி கடந்த 12 ஆண்டுகளில் அனைவரையும் உள்ளடக்கிய அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையின் அடிப்படையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கொண்டுவந்துள்ளார்.

வலிமைமிக்க இந்தியாவை உருவாக்கும் செமிகண்டக்டர் மற்றும் விண்வெளி ஸ்டார்ட் அப் தொலைநோக்கு திட்டங்கள் குறித்த செய்திதொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

இந்தியாவின் உயர் தொழில்நுட்ப துறையில் புதிய கட்டமைப்பு மாற்றத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

இதற்காக கடந்த டிசம்பர் 2021-ம் ஆண்டு 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இந்திய குறைகடத்தி திட்டம் தொடங்கப்பட்டது.

இதன்காரணமாக தேசிய பாதுகாப்பு பொருளாதார உறுதி தன்மை, டிஜிட்டல் ஆளுமை, மற்றும் எதிர்கால போட்டி தன்மை சவால்களை எதிர்கொள்வதற்கான ஆக்கப்பூர்வமான வழிமுறைகள் எட்டப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டாம் கட்ட செமி கண்டெக்டர் திட்டத்தின் கீழ் எதிர்காலத்திற்கான திறமையான பணியாளர்கள் சிக்கலான அடிப்படை கட்டமைப்புகள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

"இந்திய விண்வெளி கொள்கை 2023" ஏவுகணை, செயற்கைகோள் தயாரிப்பு, தரவு சேகரிப்பு உள்ளிட்டவற்றிக்கு உயர்முன்னுரிமை அளித்து வருகிறது.

இதனால் நாட்டின் விண்வெளி பொருளாதாரம் 8.4 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளதுடன் அடுத்த 10 ஆண்டுகளில் இது 45 பில்லியன் டாலரை எட்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தொலைநோக்கு திட்டங்களால் விண்வெளி பொருளாதாரம் கணிசமாக அதிகரித்து வருவதாக திருச்சி சிறு குறு தொழில் நிறுவனங்களின் துணை தலைவர் திரு.சண்முகம் எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

வாய்ஸ்

************

அருண் ராஜ்

தமிழகம் முழுவதும் உள்ள உணவகங்களில், உணவு பொருட்கள் சுகாதார முறையில் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுகாதாரமற்ற உணவு பொருட்களால் கேரளாவில் ஷெகல்லா தொற்று பரவும் நிலையில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தினார்.

திருப்பூர் மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மருத்துவமனை மேம்பாட்டு பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தி அவர், புற்றுநோய் சிகிச்சை மைய பணிகள் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் என்றார்.

************

நிர்மல் குமார்

தமிழக மின்துறையில் புதிதாக 15 ஆயிரம் பணியிடங்கள் உருவாக்கப்படும் என மாநில எரிசக்தி துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்சாரத் துறை வெள்ளை அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும் என்றார்.

சூரிய மின்சக்தி பயன்பாட்டில் வெளிப்படையான செயல்பாடுகள் உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

ட்ரான்ஸ்பார்மர் கொள்முதலில் ஊழலில் தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

************

இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திமுக கூட்டணியிலிருந்து விலகுவதாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அறிவித்துள்ளது.

சென்னையில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் மாநில குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

சட்டப்பேரவை தேர்தலுக்கு பின்னர் திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ், இடது சாரிகள் வெளியேறிய நிலையில் தற்போது ஐ.யூ.எம்.எல் வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

************

விஜய் பாலாஜி

தமிழக சட்டப்பேரவை நடவடிக்கைகளின் நேரலை நேற்று தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே தடை பட்டதாக மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சட்டமன்றத்தில் எழுப்பபடும் அனைத்து கேள்விகளுக்கும் துறை சார்ந்த அமைச்சர்கள் உரிய பதில் அளித்து வருவதாக குறிப்பிட்டார்.

************

ஸ்ரீநாத்

அண்மையில் ஓமன் நாட்டில் உடல் நலக்குறைவால் உயிரிழந்த தூத்துக்குடியை சேர்ந்த மாலுமி நிசாந்தின் உடலை தாயகம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மறைந்த மாலுமியின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார்.

************

நீட்

நாடுமுழுவதும் நாளை நீட் மறு தேர்வு வெளிப்படைத்தன்மையுடன் சுமூகமாக நடைபெறும் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

தேர்வு முறைகேடுகளை தடுப்பதற்காக 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், காவல் துறையினர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

551 நகரங்களில் நடைபெறும் இத்தேர்வை 22 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் எழுதுகின்றனர்.

தமிழகத்தில் 31 மையங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் தேர்வு எழுதும் நிலையில் மாணாக்கருக்காக சின்னசேலம் - சேலம் - திருப்பத்தூர் இடையே, சிறப்பு ரயில்கள் உட்பட பேருந்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

************

ஐ.ஏ.எஸ் அதிகாரிகள்

தமிழகத்தில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் சிவகங்கை மாவட்ட புதிய ஆட்சித்தலைவராகவும்,

சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிசாந்த் கிருஷ்ணா மதுரை ஆட்சித்தலைவராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் ஈரோடு வணிகவரித்துறை இணை ஆணையராக பணியாற்றிய திருமதி பொன்மணி திருச்சி மண்டல இந்து அறநிலையத்துறை கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

************

மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்டத்தில் நெல் விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி  சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் நான்காயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளதால் விவசாயிகள் இ-சேவை மையங்களில் பதிவு செய்யுமாறு வேளாண் துறை தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

************

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற உள்ள 32ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளை ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

வேலூர்

மத்திய அரசின் ஜீவன்ஜோதி பீம யோஜனா காப்பீட்டு திட்டம் குறைந்த கட்டணத்தில் காப்பீட்டு பலன்களை

வழங்குவதாக வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளி தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

இருவரி

அரியலூரில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள போதை பொருள் எதிர்ப்பு ஓட்டத்தில் பங்கேற்க விரும்புவோர் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணாக்கர் சேர்க்கைக்கு வரும் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

************

கிரிக்கெட்

சென்னையில் இந்தியாவிற்கு எதிரான 3-வது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் ஆப்கானிஸ்தான் சற்றுமுன் 5 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 22 ரன் எடுத்திருந்தது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது